**தலைப்பு 201 - பௌத்த சமய அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 201 - பௌத்த சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 29 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,056.51 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,014.18 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 42.33 மில்லியன் அதாவது 4.01 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 962.76 | 928.63 | 34.13 | 3.55 |
| மூலதனம் | 93.75 | 85.55 | 8.20 | 8.75 |
| **மொத்தம்** | **1,056.51** | **1,014.18** | **42.33** | **4.01** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18.45 | 18.11 | 13.45 | 18.85 | 58.00 | 40.65 |

**2.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.36 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0036/000 | 1.37 |
| 6000/0000/00/0002/0047/000 | 0.05 |
| 6000/0000/00/0018/0001/000 | 0.01 |
| 6000/0000/00/0019/0002/000 | 1.93 |
| மொத்தம் | 3.36 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

பௌத்த சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்கள்

16 செலவின விடயங்களுக்காக ரூபா 36.41 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 11.05 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 14 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 3.3 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை விஞ்சிய ரூபா 283,467 கூட்டுத்தொகையான 08 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.4.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள், ஆலயங்கள் அதிகாரச்சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற விகாரைகள் மற்றும் ஆலயங்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகளை சரி செய்வதற்கு திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) முறையாகவும் போதியளவான பிரகாரமும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமையினால் விகாரைகள் மற்றும் ஆலயங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் வருமானங்களின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) முறையற்ற நிதிப் பாவனையை சரி செய்ய வேண்டியிருந்தமை உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது அமுல்ப்படுத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய அந்த அறிக்கை 2016 யூன் 06 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் அளவு ரூபா 101.05 மில்லியனாக இருந்தது. அந்த மீதியில் ரூபா 45.89 மில்லியன் 1 வருடத்திற்கு மேலாகவும் 3 வருடங்களுக்குக் குறைவான காலமாகவும், ரூபா 55.16 மில்லியன் தொகை வருடமொன்றிற்கு குறைவான காலத்திலிருந்தும் கொண்டுவரப்பட்டிருந்தது.

## 3.6 செயலாற்றல்

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்காக சீருடைகள் வழங்குதல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும் கடந்த 4 வருடங்களில் சீருடை வழங்குதல் உரிய காலப்பகுதியில் வழங்குவதற்கு தவறியிருந்தது. மேலும் 2013 ஆம் ஆண்டிற்காகவும் சீருடைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முகாமைத்துவ நலிவுகள்

### மகாநாயக்கர்களின் சாரிக்காறாமவை திருத்துதல்

மகாநாயக்கர்களின் சாரிக்காறாமவை திருத்துவதற்காக ரூபா 5.45 மில்லியன் நிதிஏற்பாடு பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிதிஏற்பாட்டை வழங்குதல் மற்றும் கட்டிட திருத்தங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சிய வேலைகளுக்கான ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.5.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் நேர் ஒப்பந்த முறைமை விசேட சந்தர்ப்ப விடயங்களின் கீழ் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ஏற்பட்ட விஷேட சந்தர்ப்பமொன்றில்லாது இந்த ஒப்பந்தம் தேசிய போட்டிக் கேள்வி கோரப்படாமல் சிவில் சேவைத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய சகல கொடுப்பனவுகளிலும் குறித்த தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறின்றி மொத்த ஒப்பந்த தொகையும் ஒரே தடவையில் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆரம்ப அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் மொத்த நிர்மாணங்களும் 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் மாதம் வரையில் ரூபா 5.45 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படுகின்ற ஒரு செயற்பாடேனும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்ட வேலை அளவு தொடர்பான கூற்றொன்றை வழங்குமாறு வேலைத்தள பரிசோதகரிடம் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர் அக்கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

(உ) புராதன பெறுமதியுடைய கட்டிடமொன்று பக்தர்களினால் தோத்திரம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த புராதன பெறுமதியை பாதுகாக்கும் வகையில் கட்டிடத்தைப் பராமரிப்பதற்கும் திருத்துவதற்கும் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 778 | 686 | 92 |
| (iv) | ஆரம்ப நிலை | 34 | 32 | 02 |
| | **மொத்தம்** | **825** | **730** | **95** |